# இலங்கையில் தற்கொலையின் போக்கும் சவால்களும்

Journal of Social Review
Volume 5 (1)
June 2018
Department of
Social Sciences

றமீஸ். ஏ.

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கைச் சமூகத்தில் பரவிக்கொண்டிருக்கும் சமூகப்பிரச்சினைகளுள் தற்கொலையும் ஒன்றாகும். மூன்று தசாப்த காலமாக ஒரு சிவில் யுத்தத்தை முகங்கொடுத்த இலங்கைச் சமூகம், போருக்குப் பின்னரும் பல்வேறு சமூகப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கத் தவறவில்லை. இதில் பிரதானமான ஒன்றே தற்கொலையாகும். மனிதன் சுதந்திரப் பறவையாக உலகில் பிறப்பினும் அவனது உயிரை அவனே எடுத்துக்கொள்வதற்கு எந்த உரிமையும் இல்லை. தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதும் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும். இந்தவகையில், சமூகவியல் ரீதியாக தற்கொலை சம்பந்தமான ஆய்வுகள், கட்டுரைகள் வெளிவந்தது மிகக்குறைவாகும். எனவே அதனை நிவர்த்திக்கும் வகையில் இக்கட்டுரை எழுதப்படுகிறது. அண்மைக்காலமாக இலங்கையில் தற்கொலையின் போக்கு அதிகரிப்பதற்கான காரணம் என்ன, அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் என்ன என்பது பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரையானது இரண்டாம் நிலைத்தரவுகளை மையமாகக்கொண்டு எழுதப்படுகிறது. உலகத்தில் அதிகம் தற்கொலை இடம்பெறும் நாடுகளில் இலங்கை முக்கிய இடத்தை வகிப்பதாகவும், அதில் ஹம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களில் தற்கொலை செய்வோரின் வீதம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் கட்டுரை வெளிப்படுத்துகிறது. அதிலும் குறிப்பாக, சிங்கள தமிழ் இனத்தவர்களே அதிகம் தற்கொலை செய்வதாகவும், போருக்குப்பிந்திய இலங்கையில் வடகிழக்கில் திடீரென முளைத்த தனியார் வங்கிகள் வழங்கிய நுண்கடன் தற்கொலையைத் தூண்டும் முக்கிய காரணியாக இருப்பதை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. அதிகரித்து வரும் தற்கொலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது தடுப்பதற்கு அரசியல்வாதிகள், திட்டமிடலாளர்கள், சமயத்தலைவர்கள், சமூக முக்கியஸ்தர்கள், புத்திஜீவிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து சரியான திட்டமிடல்களை மேற்கொள்வதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

## அறிமுகம்

உலகில் தோன்றிய எல்லாச் சமூகங்களும் பிரச்சினைகளை எதிர்கொண்டே வந்திருக்கின்றன. சமூகம் ஒன்றிருந்தால் பிரச்சினைகள் தோன்றத்தான் செய்யும். பல்வேறு மனிதர்கள் ஒன்று சேர்ந்து ஓரிடத்தில் வாழும் போது பலவிதமான பிரச்சினைகள் தோற்றம் பெறும்.

இந்த வகையில், குடும்பத்துக்குள் பிரச்சினை, தனி நபர்களுக்கிடையே பிரச்சினை, அயலவர்களுக்கு இடையில் பிரச்சினை, குழுக்களுக்கு இடையில் பிரச்சினை, சமூகங்களுக்கிடையில் பிரச்சினை என பலவிதமான பிரச்சினைகள் எழுவது வழக்கம். அந்த வகையில், பிரச்சினைகளை தனிநபர் பிரச்சினை,

பொதுப் பிரச்சினை என இரண்டாக நோக்கமுடியும். இங்கு தனிநபரையும் அவரைச் சார்ந்தோரையும் பாதிக்கும் பிரச்சினைகளை தனிநபர் பிரச்சினை எனவும், பெரும்பாலான மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளை பொதுப் பிரச்சினை எனவும் கூறலாம் (Best, 2013).

இந்த அடிப்படையில் சமூகத்தைப் பாதிக்கும் பிரச்சினைகள் சமூகப் பிரச்சினைகளாக இருக்கும் அதே நேரத்தில் அவை தீர்வை வேண்டி நிற்பனவாகவும் இருக்கும். சமூகத்தின் பெரும்பான்மை அல்லது சிறுபான்மை மக்களால் சமூகத்தின் நெறிமுறைகளுக்கு முரணானது எனக் கருதப்படும் விடயங்கள் சமூகப் பிரச்சினைகளாகும் (Lundberg, 1958).

சமூகப் பிரச்சினைகள் பல்வேறு அம்சங்களைக் கொண்டமைந்ததாக இருக்கும். அவையாவன:

- அது சமூகத்தினால் உருவாக்கப் படுகிறது / ஆரம்பிக்கப்படுகிறது.
- அதன் தாக்கம் முழுச் சமூகத்தையும் பாதிக்கும்.
- இப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு தேவை என்பதை முழுச் சமூகமும் ஏற்றுக் கொள்கிறது.
- இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கமோ, ஆட்சியாளர்களோ நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

இந்த அடிப்படையில், தற்கொலை மிகப்பெரும் சமூகப் பிரச்சினையாக தற்காலத்தில் மாறி வருகின்றது. பூகோள மயமாக்கமும் இயந்திர மயமாக்கமும் மனிதனின் வாழ்வை ஆட்கொண்டு விட்டதால் மனிதன் அதிலிருந்து மீள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறான். இது சில நேரம் தற்கொலை எனும் ஈனச்செயலுக்கு இட்டுச் செல்கின்றது. குறிப்பாக, இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மேலெழுந்து வரும் வாழ்க்கைச் சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாமலும் ஏனைய சில காரணிகளாலும் தற்கொலை செய்வதற்கு சிலர் உந்தப்படுகின்றனர். அண்மைக் காலமாகத் தற்கொலையின் போக்கு அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இவ்வாறு தற்கொலை அதிகம் இடம் பெறுவதற்கான காரணம் என்ன, அதனைத் தடுப்பதற்கான வழி முறைகள் யாவை என்பது பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரை இரண்டாந்தர தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகிறது.

**தற்கொலை பற்றிய எண்ணக்கரு**

தன்னை அழித்துக் கொள்வதற்காக தனிநபர் சுயமாக ஈடுபடும் வன்செயலின் வடிவத்தைத் தற்கொலை எனலாம். இறப்பு எனும் இயற்கைக்கு மாறான செயலாக இதனைக் கருதமுடியும். இவ்வாறு சுயமாக வன்செயல்களில் (Self-inflicted violence) ஈடுபடுவதற்கு பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுக் காரணிகள் ஏதுவாக அமையலாம்.

19ம் நூற்றாண்டில் தற்கொலை பற்றிய சமூகவியல் ஆய்வை முதன்முதலாக மேற்கொண்டவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சமூகவியலாளரான எமில் துர்கைம் (Emile Durkheim) ஆவார். நேர்மறையான அல்லது எதிர்

மறையான (positive or negative) செயற்பாடொன்று தனக்கு முடிவைத்தரும் (மரணம்) என நினைத்து தனது உயிரைத் தானே மாய்த்துக் கொள்வதைத் தற்கொலை என துர்கைம் கூறுகிறார் (Durkheim, 1897). "திட்டமிட்ட அடிப்படையில் தனது உயிரைத் தானே எடுத்துக் கொள்கின்ற செயலை தற்கொலை என அமெரிக்கனா வாழ்வியற் களஞ்சியம்" (Encyclopedia of Americana) கூறுகிறது (1827:857).

மக்களின் நடத்தையை நெறிப்படுத்தும் சமூக ஒழுங்கு சீர்குலையும் போது சமூக உறுப்பினர்கள் உள ரீதியாகப் பாதிக்கப் படுகின்றார்கள். இவர்களிடம் வாழ்க்கையின் அர்த்தம், நோக்கம், பயன்பாடு போன்றன இருப்பதில்லை. இந்த நிலையில், இவர்கள் சமூகப்பிணைப்பு, சமூகக்கட்டுப்பாடு என்பவற்றிலிருந்து தூரமாகி தன்னை சமூகமும், சமூகத் தலைவர்களும் அலட்சியம் செய்கிறார்கள் என எண்ணுவார்கள். இந்த நிலையிலேயே தற்கொலை செய்யத் தூண்டப்படுவர்.

தற்கொலை பற்றிய ஆய்வுகள் இரண்டு வகைப்படும்.

1. தற்கொலை புரிதல்
2. தற்கொலை முயற்சி

ஒருவர் தனது உயிரை மாய்ப்பதற்காகத் திட்டம் தீட்டி, அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி தனது உயிரை மாய்த்துக் கொள்வதே தற்கொலை புரிதல் எனலாம். ஆனால், தற்கொலைக்கான திட்டத்தைத் தீட்டி அதனை நடைமுறைப் படுத்தும் போது தடுக்கப்பட்டு அல்லது சிகிச்சையின் பின்னர் காப்பாற்றப்பட்டால் அதனைத் தற்கொலை முயற்சி என்பர். பல நாடுகளில் தற்கொலை முயற்சி தண்டனைக்குரிய குற்றமாகும். அதனால் தற்கொலை முயற்சிகள் பதிவு செய்யப்படாமல் மறைக்கப்படுகின்றன அல்லது இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன. சிலர் தங்களது பிரச்சினைகளைச் சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

## தற்கொலையின் வகைகள்

தற்கொலையின் வகையினைப் பின்வருமாறு நோக்கலாம்.

1. தன்னலம் கருதிய தற்கொலை (Egoistic Suicide)
2. உன்னதத் தற்கொலை (Altruistic Suicide)
3. நியமமறு தற்கொலை (Anomic Suicide)

எமில் துர்கைம் இந்த மூன்று வகையுடன் தலைவிதித் தற்கொலை (Fatalistic Suicide) என்ற ஒன்றையும் உள்ளடக்குகிறார். இனி இது பற்றி விரிவாக நோக்கலாம்.

### தன்னலம் கருதிய தற்கொலை (Egoistic Suicide):

சமூக ஒருங்கிணைவு (Social Integration) சீர்குலையும் போது இவ்வகையான தற்கொலைகள் இடம்பெறும். சமூக இடைவினைகள் குறைந்து தனிநபர் வாதம் (Individualism) எழுச்சியுறும் போதே இவ்வாறான சூழ்நிலைகள் தோற்றம் பெறும். இவ்வகையான பிரிவுக்குள் அடங்குபவர்கள் ஒரு தனிமையை உணர்வர். உதாரணமாக, தாங்க முடியாத

நோய், குடும்ப ஆதரவில்லாத வயோதிபர்கள், தனிமையாக வாழ்பவர்களே இவ் வகையான தற்கொலையில் இறங்குவர். இந்த வகையான தற்கொலைகள் மிகக்குறைந்த தொகையிலேயே இடம்பெறும்.

### உன்னதத் தற்கொலை (Altruistic Suicide)

சமூக ஒருங்கிணைவு அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் இவ் வகையான தற்கொலைகள் இடம்பெறும். தன் உயிரை தன் நாட்டிற்காக, தன் இனத்திற்காக, தன் சமூகத்திற்காகத் தியாகம் செய்வதன் மூலம் நன்மை ஏற்படும் எனக்கருதி மேற்கொள்ளப்படும் தற்கொலைகளாக இது இருக்கும். உதாரணமாக, பலஸ்தீன ஹமாஸ் இயக்கத் தற்கொலைகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) தற்கொலைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஜப்பான் நாட்டில் இத்தகைய தற்கொலைகளை ஹராகிரி (Harakiri) என அழைப்பர். கூரிய வாளினால் தனது வயிற்றைக் கிழித்து உயிர் துறப்பதை இவ்வாறு அழைப்பர். இந்த வழக்கம் சாமுராய் என்று அழைக்கப்பட்ட பிரபுத்துவ வகுப்பினரால் பின்பற்றப்பட்டது. இத்தகைய தற்கொலை ஒருவருடைய மன உறுதி, வீரம், தன்னடக்கம், நேர்மை ஆகியவற்றை வெளிப்படுத்தும்.

### நியமமறு தற்கொலை (Anomic Suicide)

சமூகச் சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள் நெறிபுரளும் போது நிகழும் தற்கொலைகளாக இவை இருக்கும். அதாவது சமூகக் கட்டமைப்பு, விழுமியங்கள் சிதைவுறும் போது தற்கொலைகள் சாதாரண நிகழ்வுகளாகின்றன. இவ்வகைத் தற் கொலைகள் எல்லாச் சமூகங்களிலும் இடம் பெறுகின்றன. இந்தப் பின்னணியில் சுதந்திரத் தன்மையை ஏற்படுத்துவதில் சமூகச் சூழல் தவறும்போதும் தனிமனிதன் எங்கு செல்வதென்று திசை தெரியாமல் தடுமாறும் போதும் இவ்வாறான தற்கொலைகள் இடம்பெறும் (Comer, 1996). மேற்கு நாடுகளில் கைத்தொழில் வளர்ச்சியினால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் பல பாதிப்புக்களை ஏற்படுத்தின. அதன் காரணமாக தற்கொலைகள் பெரும் சமூகப் பிரச்சினைகளாக உள்ளன.

### தலைவிதித் தற்கொலை (Fatalistic Suicide):

இது தற்காலத்திற்குப் பொருத்தமில்லை ஆயினும், ஒரு தனிநபர் அடக்குமுறைக்கும், அதிகமான கட்டுப்பாட்டிற்கும் உட் படுத்தப்படும் போது தனக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என உணர்ந்து, தற்கொலை செய்வதே விதி என நினைத்து தற்கொலை செய்வதே இதுவாகும் (Durkheim, 1897; Gidden, 2001). உதாரணம்: இந்தியாவில் பின்பற்றப்படுகின்ற உடன் கட்டை ஏறுதல் (Sati pooja)

### தற்கொலைக்கான காரணங்கள்

தற்கொலையைத் தூண்டும் காரணிகளைப் பின் வருமாறு குறிப்பிடலாம்.

- மனஅழுத்தம்
- உளநோய்கள்
- போதைப்பொருள் துஷ்பிரயோகம்

- பண்பாட்டு, குடும்ப, சமூக ரீதியான காரணிகள்
- பரம்பரை
- வறுமை
- வேலையின்மை
- வீடின்மை
- பாலியல் பிரச்சினைகள்
- காதல் தோல்வி
- பரீட்சை தோல்வி
- தனிமை
- ஏமாற்றம்
- முறைகேடான கர்ப்பம்

போன்ற காரணிகளைக் குறிப்பிட முடியும்..

27% தொடக்கம் 90% வரையிலான தற்கொலைகள் நிகழ்வதற்கு உளநோய்களே காரணம் என ஆய்வுகள் கூறுகின்றன(Chang et al, 2011). மேற்கைத்தேய நாடுகளுடன் ஒப்பிடும் போது உளநோயால் பாதிப்புறுவோர் ஆசிய நாடுகளில் குறைவு. மனஅழுத்தக் காரணிகளால் தற்கொலை செய்வோரின் தொகை 20 மடங்காகும் என ஒரு ஆய்வு கூறுகிறது (Kutcher & Chehil,2012). உளமருத்துவ சிகிச்சை பெற்ற 25 - 40% ஆனோர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் (Pirkis & Burgess, 1998). இதிலும் குறிப்பாக, முன்னர் தற்கொலை செய்ய முயற்சித்த 20% ஆனவர்களில் 1% ஆனோர் அந்த வருடம் நிறைவடைவதற்குள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் (Chang et al.,2011).

மனஅழுத்தம், ஏனைய உளநோய் காரணமாக போதைப் பொருட்களைத் தீவிரமாக உபயோகிக்கத் தொடங்கி தற்கொலை செய்துகொண்டவர்களும் உள்ளனர் (Vijaykumar et al.,2011). இவ்வாறானவர்களுக்கு தனிப்பட்ட வாழ்வில் தோல்விகள், இழப்புகள் ஏற்படுவது பாதிப்பை இன்னும் அதிகரிக்கும். உண்மையில் போதைப்பொருள் துஷ்பிரயோகம் (substance misuse) மன அழுத்தத்தோடு சம்பந்தப்பட்டது. போதைப் பொருள் பாவித்த அதிகம்பேர் தற்கொலைக்குத் தூண்டப்பட்டதாக ஆய்வு கூறுகிறது (Youssef & Rich, 2008). மதுபாவனை அதிகமாக உள்ள நாடுகளிலும், அதிகமான சாராயத் தவரணைகள் உள்ள நாடுகளிலும் தற்கொலைகள் செய்யும் வீதம் உயர்ந்து காணப்பட்டுள்ளது (Sher, 2006).

அந்த வகையில், அதிக மதுபாவனையிலும், போதைப் பொருள் பாவனையிலும் மூழ்கியிருப்பவர்கள் தற்கொலை செய்யும் வீதம் அதிகரித்திருப்பதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றது. மேலும் சிறுவயதில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளானவர்கள் தற்கொலைக்கு முயற்சித்திருப்பதாகவும் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன (Wegman & Stetler).

இவைதவிர வறுமை, வேலையின்மை, வீடின்மை போன்றவையும் தற்கொலையைத் தூண்டும் காரணிகளாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. 1997 இல் கடன்சுமை அதிகரித்ததால் இந்தியாவில் சுமார் 200,000 பேர் தற்கொலை செய்தனர் (Lerner, 2010).

## தற்கொலை செய்யும் முறைகள் (Methods of Suicide)

தற்கொலை செய்யும் முறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடும். இதில் பிரதானமான முறைகளாக;

1. தூக்கில் தொங்குதல்
2. நஞ்சு அருந்துதல்
3. ஆயுத்தால் தன்னைத்தானே தாக்குதல்
4. மலையிலிருந்து குதித்தல்
5. தன்னைத்தானே வெட்டிக்குத்தி தற்கொலை செய்தல்

56 நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வில், 53% ஆன ஆண்களும், 39% ஆன பெண்களும் தற்கொலை செய்வதற்காக பின்பற்றுகின்ற வழிமுறை தூக்கில் தொங்கி தற்கொலை செய்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது (Ajdacic et al., 2008). மாற்றமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 30% தற்கொலைகள் நஞ்சருந்துதல் (Pesticide poisoning) மூலம் இடம்பெறுவதாக ஆய்வு ஒன்று கூறுகிறது (WHO, 2016). இதுவே சீனாவிலும் தற்கொலைக்கான ஒரு முறையாகப் பின்பற்றப் படுகின்றது. இன்னுமொரு ஆய்வில் தற்கொலைக்கான முறைமையாக:

1. ஆயுதங்களைப் பாவித்து – 80- 90%
2. நீரில் மூழ்கி – 65-80%
3. தூக்கில் தொங்கி – 60-85%
4. தனது வாகனத்தை வேகமாக ஓட்டி – 40-60%
5. மலையிலிருந்து குதித்து– 35-60%
6. நஞ்சருந்தி – 60-75%
7. போதைப்பொருள் அதிகமாகப் பாவித்து – 1.5-4% தற்கொலை செய்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது (Yip et al, 2012).

இதன்படி, ஒவ்வொரு 39 நிமிடத்திலும் ஒருவர் தற்கொலை செய்து கொள்வதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) கூறுகிறது. அதுமட்டுமன்றி 10-20 மில்லியன் பேர் வருடாந்தம் தற்கொலை முயற்சியிலிருந்து தப்பிப்பதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது (WHO, 2017). 2015 இல் மட்டும் 828,000 பேர் (1.5%) தற்கொலை செய்துள்ளனர் (GBD, 2016).

### இலங்கையில் தற்கொலையின் போக்கு

அண்மைக் காலமாக தற்கொலை இலங்கையில் ஒரு பெரும் சமூகப் பிரச்சினையாக மாறி வருகின்றது. உலக சுகாதார தேசிய நிறுவனத் தலைவர், கலாநிதி நீல் பெர்னான்டோ 2011இல் வெளியிட்ட அறிக்கையில் ஒவ்வொரு வருடமும் 4000 பேர் இலங்கையில் தற்கொலை செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 15-44 உட்பட்ட வயதுப் பிரிவினரே அதிகமாகும். பதிவாளர் பொதுத் திணைக்களத்தின் புள்ளிவிபரப்படி (Registrar general's office of statistic dept), இலங்கை சுதந்திரம் அடையும்போது (1948களில்) ஒரு இலட்சம் பேரில் 9 பேர் தற்கொலை செய்ததாகவும், 1970களில் இது 19ஆக அதிகரித்து, 1983களில் 33ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மைய புள்ளி விபரங்களின் படி, இது 15ஆகக் காணப்படுகின்றது. அதிலும் மிக முக்கியமாக 2018ஆம் ஆண்டு வடக்கில் மட்டும் 60 பேர் தற்கொலை செய்து

கொண்டுள்ளதாகப் புள்ளிவிபரம் கூறுகிறது (தினக்குரல், 2019). இதற்கு யுத்தத்தின் பின்னால் தோன்றிய சிறு தனியார் வங்கிகளே காரணமாகும். அதாவது, இவ் வங்கிகள் தொழில் முயற்சியாண்மைக்கும், ஏனைய காரணிகளுக்காகவும் சிறுகடன் முறையை (Micro credit system) அறிமுகப்படுத்தி, அதன் மூலமாக யுத்தத்தால் துவண்டு போயிருந்த சமூகத்தை கடன் சுமைக்குள் தள்ளி விட்டது. காலப்போக்கில் இக்கடன் தொகையை மீளச்செலுத்த முடியாததாலும் வட்டியை செலுத்த முடியாததனாலும் தற்கொலையை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது. இதுவே கிழக்கின் சில பகுதிகளின் நிலைமையாகும்.

2018 இல் ஏறாவூரில் மட்டும் சிறுகடன் தொல்லைகளால் 15 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் (Hilfan, 2018). பொதுவாக உலகில் தற்கொலை அதிகம் இடம்பெறும் நாடுகளில் இலங்கை 22ம் இடத்தில் இருக்கிறது (Wuthmann, 2017).

அட்டவணை 01 : இலங்கையில் தற்கொலை வீதம்.

| வயதுப்பிரிவு | தற்கொலை வீதம்/1000 பேரில் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1950 | 1970 | 1975 | 1980 | 1986 | 1989 | 1996 | 1999 |
| 14வயதுக்குட்பட்ட | - | 0.01 | 0.01 | 0.02 | 0.01 | 0.02 | 0.02 | 0.02 |
| 15-24 | 0.10 | 0.42 | 0.38 | 0.63 | 0.63 | 0.55 | 0.45 | 0.41 |
| 25-44 | 0.09 | 0.27 | 0.25 | 0.40 | 0.48 | 0.49 | 0.47 | 0.49 |
| 45-64 | 0.10 | 0.24 | 0.23 | 0.28 | 0.34 | 0.37 | 0.35 | 0.38 |
| 65-74 | 0.21 | 0.44 | 0.41 | 0.40 | 0.49 | 0.47 | 0.55 | 0.55 |

மூலம் : புள்ளிவிபரவியல் திணைக்களம், 2012

மேலுள்ள அட்டவணையின்படி, அண்மைக் காலத்தில் 65-74 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மத்தியிலும், 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் மத்தியிலும் தற்கொலை அதிகம் நிகழ்ந்து கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

இலங்கையில் தற்கொலை முறைகளாக (methods) பின்வருவனவற்றைப் பின் பற்றுகின்றனர்.

- புகையிரதத்திற்கு முன்னால் பாய்தல்
- நஞ்சருந்துதல்
- தூக்கில் தொங்குதல்
- ஆழமான கிணற்றில் / குளத்தில் குதித்தல்
- உயரத்திலிருந்து குதித்தல்

- ஆயுதங்களைப் பாவித்துத் தற்கொலை செய்தல்
- போதைப்பொருட்களை அதிகம் நுகர்வதன் மூலம்
- மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் என்பவற்றைக் குடிப்பதன் மூலம்

ஏனைய நாடுகளைப் போலல்லாது உன்னதமான தற்கொலை (Altruistic suicide) அதிகம் இடம்பெற்ற நாடுகளுள் இலங்கை முதலிடம் பெறுகிறது. இலங்கை அரசாங்கத்திற்கும் / படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையே கடந்த 3 தசாப்த காலமாக இடம்பெற்ற கோர யுத்தத்தில் விடுதலைப்புலிகள் தற்கொலைத் தாக்குதலை ஒரு போர்த்தந்திரமாகப் பயன்படுத்தினர். கொழும்பு கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையம் 2001ம் ஆண்டைய தாக்குதல், 1998 இல் நடத்தப்பட்ட கண்டி தலதா மாளிகைத் தாக்குதல், 1991 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டமை, 1993இல் இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கொல்லப் பட்டமை போன்றவற்றிற்கு புலிகள், தற்கொலைத் தாக்குதலையே ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். 1980 தொடக்கம் 2000ம் ஆண்டுவரை, புலிகள் 168 தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியதாக ஒரு ஆய்வு கூறுகிறது (IISS,2003).

இவ்வகையான தாக்குதல்கள் பொது மக்கள், இராணுவத்தளங்கள், இலங்கையின் பொருளாதாரத் தளங்களை முற்றாக அழிக்கும் விதத்தில் அமைந்திருந்தன. இத் தற்கொலைத் தாக்குதல்கள் தங்கள் சமூகத்திற்கும், போராட்டத்திற்கும் செய்யும் அறப்பணியாகப் புலிகளால் கருதப்பட்டது. இருந்த போதிலும் இத் தற்கொலைத் தாக்குதல்கள் இலங்கையின் பொருளாதாரத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்படுத்திய தாக்கங்கள் எண்ணிலடங்காதவை.

தற்கொலை செய்யும் விதம் இலங்கையில் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. மொனராகலை மாவட்டத்தில் அதிக தற்கொலைகள் இடம்பெறுவதாகப் புள்ளி விபரங்கள் கூறுகிறது. அதிலும் குறிப்பாக, கதிர்காமம், பிபில, வெல்லவாய, தனமல்வில போன்ற இடங்களில் தற்கொலைகள் அதிகம் இடம் பெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

அதேபோன்று ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ, திஸ்ஸ மஹாராம, லுலுகம் விகாரை போன்ற இடங்களிலும் தற்கொலைகள் அதிகம் இடம் பெறுவதாக புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இந்தப் பிரதேசங்களிலும், மாவட்டங்களிலும் விஷேட அம்சம் யாதெனில், இவை அனைத்தும் குடியேற்றக் கிராமங்களாகும். பிற இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு குடியேற்றப் பட்டவர்களே இங்கு வாழ்கின்றனர். இவர்கள் மத்தியில் தற்கொலைகள் அதிகம் இடம் பெறுகின்றன. ஆனால் போருக்குப் பிந்திய இலங்கையில் வடகிழக்கில் தற்கொலை வீதம் அதிகரிக்கின்ற போக்கு காணப்படுகின்றது. சிறுகடன் வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடுகளே வடகிழக்கில் தற்கொலை அதிகரிப்பதற்குப் பிரதான காரணமாகும்.

தற்கொலையின் இனப் பரிமாணத்தை எடுத்து நோக்கும்போது, குடிசனத் தொகுப்பு ரீதியில் அதிகளவு

தற்கொலை வீதம் சிங்களவர்கள் மத்தியிலும் அடுத்து தமிழர்கள் மத்தியிலும் நிகழ்வதாக புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றது. பிற மாவட்டங்களில் குடியேறும் மக்களாக சிங்களவர்கள் இருப்பதால், அங்கு சமூக அடிக்கட்டமைப்பு விதிகள், வாழ்வாதார வசதிகள் ஒழுங்கான முறையில் இல்லாத காரணத்தால் தற்கொலைகள் இடம்பெறுகின்றன. 1993 இல் நிகழ்ந்த மொத்தத் தற்கொலைகளில் 85% சிங்களவர்களும் 13% தமிழர்களும் 1% முஸ்லிம்களும் காணப்படுகின்றனர். இஸ்லாம் மதம் தற்கொலையை முழுமையாகத் தடை செய்திருப்பதன் காரணமாக தற்கொலை, முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் மிகக் குறைவாக இடம் பெறுகிறது.

ஒரு தனிநபர் தற்கொலை செய்யும் போது அதனால் அவரை நம்பியிருக்கும் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கும், ஏனைய குடும்ப உறுப்பினர்களுக்கும், நண்பர்களுக்கும், அயலவர்களுக்கும், சமூகத்திற்கும், ஊரவர்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இவ்வகையான திடீர் முடிவின் காரணமாக அவரை நம்பி இருப்பவர்களுக்கு சமூக, பொருளாதார, உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

தற்கொலையைத் தடுப்பதற்கு இலங்கையில் ஆக்க பூர்வமாக எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், இதனைத் தடுப்பதற்கு ஒழுங்கான திட்டமிட்ட நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இதில் அரசியல்வாதிகள், கொள்கை வகுப்பாளர்கள், திட்டமிடலாளர்கள், சமூக ஆர்வலர்கள், மத குருமார்கள் மற்றும் ஏனையோர் மீதும் இதனைத் தடுக்கும் பெரும்பங்கு இருக்கிறது.

## முடிவுரை

தற்கொலை என்பது மிகப் பாரதூரமான ஒரு சமூகப் பிரச்சினையாக இன்று மாறிக் கொண்டு வருகிறது. தனித்துவ வாதம் (Individualism), பொருள்முதல் வாதம் (Materialism) போன்றன மனிதனில் பெரும் செல்வாக்கு செலுத்தும் இக்கால கட்டத்தில், அவற்றைப் போதுமானளவு அடைந்து கொள்ள முடியாமையால் மனிதன் தற்கொலைக்குத் தூண்டப் படுகிறான். அது மட்டுமன்றி, வாழ்க்கையில் ஏற்படும் சமூக, பொருளாதார, உளவியல் தாக்கங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஒருவன் தற்கொலையில் குதிக்கிறான். இது ஒரு கோழைத் தனமாகக் கருதப் பட்டாலும், தற்கொலை செய்பவனின் பார்வையில் இது ஒரு தவிர்க்க முடியாத நிலையாகக் காணப்படுகிறது.

அந்த வகையில் தற்கொலையை முடிவுக்குக் கொண்டு வருவதில் / தடுப்பதில் தற்கொலையைத் தூண்டும் காரணிகளை அடையாளம் கண்டு, அதனை உடனடியாகத் தீர்த்து வைக்கும் நடவடிக்கையில் இறங்க வேண்டும். குறிப்பாக, மனஅழுத்தம், உளவியல் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைத்தல், போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல், பொருளாதார நிலைமையை சீர்செய்தல் போன்ற காரணிகளை நிறை வேற்றுவதன் மூலம் தற்கொலையை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடியும். அதுமட்டுமன்றி விவசாயிகள்

பயன்படுத்தும் மிக நச்சுத்தன்மை கொண்ட கிருமி நாசினிகளை இலங்கையில் தடை செய்வதன் மூலம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமப் புறங்களில் ஏற்படும் தற்கொலைகளை ஓரளவுக்குக் குறைக்க முடியும். உளவள ஆலோசனைகள் வழங்கும் நிறுவனங்களை மாவட்டம் தோறும் ஏற்படுத்தப்பட வேண்டும். அவைகள் தங்களது சேவைகளை நேரடியாகவும், தொலைபேசி, இணையத் தளங்கள் மூலமாகவும் விஸ்தரிக்க வேண்டும். இதன் மூலமாக மனஅழுத்தம் மற்றும் உளவியல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நபர்களின் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்து, தற்கொலையைத் தவிர்க்க முடியும்.

தற்கொலை என்பது மக்கள் மத்தியில் சமூக, பொருளாதார, அரசியல் அதிருப்தியையும், சமூக உள ரீதியான அழுத்தங்களையும் எடுத்துக்காட்டும் குறியீடாக உள்ளது. உலகில் மிகவும் உயர்ந்த தற்கொலை வீதம் உள்ள நாடாக இலங்கை திகழ்வதனால் இவ்வாறான பிரச்சினைகள், அழுத்தங்கள் சமூகத் தளங்களில் அதிகம் பேசப்படுகிறது. இந்த வகையில், அதிகரிக்கும் தற்கொலை வீதத்தைக் கட்டுப்படுத்த அரசியல் வாதிகள், திட்டமிடலாளர்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், சமயத் தலைவர்கள் என எல்லோரும் சேர்ந்து திட்டமிடல் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

இல்லாவிடின், வெறுமனே அபிவிருத்தித் திட்டங்களில் அரசு மேற்கொள்ளும் செலவுகள், முதலீடுகள் பிரயோசனமற்றதாக மாறிவிடும். இந்த மன விரக்தியான நிலைக்கு நாம் எல்லோரும் பொறுப்பாளர்கள் என்பதை உணர்ந்து இந்த தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் எல்லோரும் முன்வர வேண்டியது கட்டாயக் கடமையாகும்.

## References


Ajdacic-Gross V, Weiss, M.G, Ring, M, Hepp. V, Bopp M, Gutzwilter F, Rossler W.(2008). "Methods of suicide: International Suicide patterns derived from the WHO mortality database" *Bulletin of the World Health Organization* 86(9):726-732.

Best, Joel. (2013). *Social Problems.* 2nd ed. New York: Norton.

Chang,B, Gitlin,D & Patel,R. (2011). "The depressed patient and Suicidal patient in the emergency dept: Evidence based Management & treatment strategies." *Emergency Medicine Practice*. 13(19): 1-23

De Silva, P.(1989). *Suicide in Sri Lanka.* Kandy: Institute of Fundamental Studies.

Dissanayake, S.A.W & De Silva, P. (1974). "Suicide & Attempt suicide in Sri Lanka", in *Ceylon Journal of Medical Science* 23.

David Lester. (1987). "The Statistic of National suicide rates in Europe 1875-1975" in *Society & Social Research,* Vol 71.

Davidson,L. (1991). *Risk factors for Youth Suicide.* New York: Hamisphere

Durkheim, E. (1981). *Suicide: A study in Sociology*. New York: Free press.

Encyclopedia Americana. (1829). Connecticut: Groiler Incorporated, Vol.25

Gidden, A. (1997). *Sociology*. Oxford: Blackwell Publishers.

GBD 2015 Mortality of causes & Death collaborators (2016). "Global, regional, national life expectancy, all-cause mortality & cause specific mortality for 249 causes of death, 1980-2015: A systematic analysis for the global burden of disease study 2015: *Laneet,* 388(10053)(1459-1544)

Hilfan, M. (2018). "Suicide as a social issue in Eravur Divisional secretariat" A paper presented at the 6th International conference, FIA, SEUSL, 22-12-2018

International Institute for strategic studies. (2003). "Sri Lanka's (LTTE) historical background. IISS armed conflict Databased

Kutcher,S & Chehil,S.(2012). *Suicide Risk Management: A manual for Health Professional (2nd ed,) CheicesterJohn wiley & Sons.*

Lerner, G. (2010). "Activist: Farmer suicide in India linked to debt, globalization" CNN world. 16th Jan, 2013. Retrieved on 15th January, 2018.

Pushpakumara, W.D.N.R. (1989). Resettlement and suicide: A study in system, MA Thesis submitted to university of Peradeniya.

Pirkis,J & Burgess, P(1998). "Suicide & recency of health care contacts. A systematic review" *The British journal & psychiatry.* 173(6):462-74

Sher,S(2006). "Alcohol corruption & suicide". *QJM.* 99(1):57-61

Sri Lanka suicide rate one of the world's highest. World social website. Retrieved 16th Dec, 2018

Vijayakumar, L, Kumar, M.S, Vijayakumar, V. (2011). Substance use & suicide. *Current opinion in psychiatry.* 24(3):197-202

Wegman,H.L, Stetler,C.(2009). "A meta-analytic review of effects & childhood abuse on medical outcomes in adulthood". *Psychosomatic Medicine.* 71(8):805-812

World Health Organization. (2000). "Mental health prevention of Suicide." www.who.int/mental/health/prevention/suicide/charts/en/. Retrieved on 12-01-2010.

World Health Organization.(2016). Suicide fact sheet. Retrieved on 24-12-2018.

Wuthmann, Walter. (2017). "suicide in Sri Lanka". Daily news 23-10-2017. Retrieved on 10-10-2018

Youssef N.A, Rich CL. (2008). Does acute treatment with sedatives/hypnotics for anxiety in depressed depressed patients affect suicide risk? : A literature review. *Annal of clinical psychiatry* 20(3):157-69

Yip, P.S, Caine, E, Yousuf, S, Chang, S.S, WUKC, Chen YY.(2012). "Mean restriction for suicide Prevention" *Laneet.* 379(9834):2399

தினக்குரல். "வடகிழக்கில் தற்கொலை" 24-01-2019.